**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**இரண்டாம் வருட கலைமாணிப் பரீட்சை - பருவம் I - 2017/2018**

**PSC 2118 - அரசியல் சிந்தனையின் பிரதான போக்குகள்**

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**நான்கு (04)** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

ஒவ்வொரு விடையும் ஆகக்கூடியதாக **பதினைந்து** (15) புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

(1) பிளேட்டோவின் கருத்திற்கிணங்க, தனிநபர்களினுடைய ஆத்மாக்கள், அரசின் ஆத்மா மற்றும் தொழிற்பிரிப்பு ஆகியவற்றுக்கிடையில் ஒத்திசையும் சமநிலையின் ஊடாக நீதியானது உச்சநிலையை அடைந்துவிட முடியும். பரீட்சிக்குக.

(2) (a) சிறந்த நடைமுறைச்சாத்தியமான அரசு குறித்த அரிஸ்டோட்டிலிய எண்ணக்கருத்தாக்கத்தை விளக்குக.

(b) இலட்சிய அரசின் மீதான அவரின் கருத்துக்களை சுருக்கமாக அடையாளப்படுத்துக.

(3) ரோமானியக் குடியரசு அரசியலமைப்பின் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் மீதான பொலிபியஸின் விளக்கத்தை பரீட்சிக்குக.

(4) அரசின் தோற்றம் தொடர்பில் செனகா முன்வைத்த அரசியல் கருத்துக்களில் மத ரீதியான பண்புகள் காணப்படுகின்றதா? விளக்குக.

(5) ‘கடவுளின் நகரம்’ என்ற அவருடைய நூலில் புனித ஒகஸ்தீன் முன்வைத்த அடிப்படை அரசியல் எண்ணக்கருக்களை விளக்குக.

(6) மாக்கியவல்லியின் இத்தாலியின் சமூக - அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மாக்கியவல்லி ‘இளவரசன்’ எனும் அவருடைய நூலில் முன்வைத்த முக்கியமான அரசியல் கருத்துகளை அடையாளப்படுத்துக.

**P.T.O**

(7) அரசின் உறுப்பு, அரசியல் அதிகாரம் மற்றும் சட்டங்கள் மீதான புனித தோமஸ் அக்வைனாஸின் கருத்துக்களை விளக்குக.

(8) பின்வரும் அரசியல் சிந்தனையாளர்களில் யாராவது **இருவர் (02)** பற்றி குறிப்புகள் எழுதுக:

(a) மார்கஸ் டுல்லியஸ் சிசரோ

(b) தோமஸ் ஹொப்ஸ்

(c) ஜோன் லொக்

(d) ஜீன் ஜெக்கியூஸ் ரூசோ

**************************